**<u>கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,</u>**
**<u>ஸ்ரீவில்லிபுத்தூர்</u>**

**OS.No: 199/2024** **நாள் 11.06.2026**

**வாசா.2, திருமதி.சந்தானலட்சுமி.**

**வா.சா.2 மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் எதிர்வாதி தரப்பில் குறுக்கு விசாரணை–**

வழக்கின் வாதியானவர் என்னுடைய சித்தப்பா மகன். தாவா சொத்தின் கிரைய ஆவணத்தின் நகலை வழக்கில் உள்ள பிரதிவாதியானவர் வாதி வசம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த கிரைய ஆவணத்தின் நகல் இன்று வரையிலும் வாதி வசம் தான் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கிரைய ஆவணத்தின் நகலை ஒப்படைக்கும்போது தாவா கிரைய ஒப்பந்த ஆவணத்தையும் ஒப்படைத்தார். மேற்படி கிரைய ஆவணத்தின் நகலில் உள்ள எதிர்வாதி சுப்பையாபாண்டியனின் கையொப்பமும், தாவா கிரைய ஒப்பந்த ஆவணத்தில் உள்ள சுப்பையாபண்டியனின் கையொப்பம் வித்தியாசமாக உள்ளதாக வாதியானவர் எதிர்வாதியிடம் கேட்டாரா என்று கேட்டால் அவர் கேட்டார் அதற்கு சுப்பையாபாண்டியன் என்பவர் கையொப்பங்களை மாறி மாறி போடுவதாக சொன்னார். தாவா கிரைய ஒப்பந்த ஆவணமானது வழக்கிற்காக வேண்டி பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்றால் அது சரியல்ல. அதனால் தான் கிரைய ஒப்பந்த ஆவணத்தில் உள்ள கையொப்பத்தை பற்றி சுப்பையாபாண்டியனுக்கு தெரியாது என்றால் அப்படியில்லை. உண்மையிலேயே கிரைய ஒப்பந்த ஆவணத்தில் எதிர்வாதியானவர் கையொப்பம் செய்திருந்தால் அவருடைய சரியான கையொப்பத்தை செய்யும்படி வாதியானவர் எதிர்வாதியிடம் சொல்லியிருப்பார் என்றால் சொல்லியிருப்பார். கிரைய ஆவணத்தில் நகலில் உள்ள கையொப்பமும், தாவா கிரைய ஒப்பந்த ஆவணத்தில் உள்ள கையொப்பமும் வேறு வேறாக உள்ளது என்றும், எதிர்வாதியின் உண்மையான கையொப்பத்தை போட்டு கொடுக்க வேண்டும் என்று சொல்லி வாதியானவர் எதிர்வாதிக்கு அறிவிப்பு எதையும் அனுப்பியிருந்தாரா என்றால் அனுப்பவில்லை. வாதியின் தம்பி மீனாட்சி சுந்தரத்திற்கும் இந்த வழக்கு எதிர்வாதிக்கும் இடையில் தாவா சொத்தை பொறுத்து ஏற்கனவே ஒரு கிரைய ஒப்பந்த ஆவணம் இருந்துள்ளது பற்றி எனக்கு தெரியுமா என்று கேட்டால் தெரியாது. 2022ம் ஆண்டு முதல் இன்று வரை பிராது சொத்தில் மேற்படி மீனாட்சி சுந்தரம் தா்ன குடியிருந்து வருகிறார் என்றால் ஆமாம். பிராது சொத்தை பொறுத்தமட்டில் மீனாட்சி சுந்தரமும், பிரதிவாதி சுப்பையாபாண்டியனும் தான் கிரைய ஒப்பந்தத்தை செய்து கொண்டார்கள் என்று சொன்னால் அது சரியல்ல. இவ்வழக்கின் வாதியானவர் அவருடைய தம்பி மீனாட்சி சுந்தரத்திற்கு வெளியில் இருந்து கடனாக ரூ.10 லட்சம் பணத்தை வாங்கி கொடுத்திருந்தார் என்று சொன்னால் அது சரியல்ல. சாட்சி மீண்டும் தானாக என்னிடம் என் தம்பி முத்துச்சாமி சீட்டு பணம் போட்டிருந்தார் அந்த பணத்தை எப்பொழுதும் என் கையில் தான் வைத்திருப்பேன். சீட்டு கட்டுவதற்காகவோ அல்லது இடம் வாங்குவதற்காகவோ பணம் தேவைப்பட்டால் என்னிடமிருந்து என் தம்பி வாங்கிக்கொள்வதாக சொன்னார் என்று சாட்சியம் அளிக்கிறார். சீட்டு நடத்துவதற்காக

வேண்டி நான் அனுமதி எதுவும் வாங்கவில்லை. நான் சீட்டு பணம் பிடிப்பது இல்லை என்றும் வழக்கிற்காக வேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அது சரியல்ல . தாவா சொத்தானதை வாங்கும் அளவிற்கு என் தம்பி முத்துச்சாமிக்கு பணம் வசதி இல்லை என்று சொன்னால் அது சரியல்ல. வாதியானவர் தாவா சொத்தானதை கிரையம் செய்து கொள்ள எப்பொழுதும் தயாராகவும் இருந்தார் என்று நான் சொல்வது தவறு என்று சொன்னால் அது சரியல்ல. வாதி கோரிய பரிகாரம் கிடைக்கதக்கதல்ல என்று சொன்னால் அது சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை.**

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 1th day of June 2026.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.